Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC /69/2023 |
| Sessions | : | PW1 |
| | | |
| Deposition of witness for | : | Prosecution |
| Name | .. | திரு. மோகன் |
| Father's Name | .. | திரு. பாஸ்கர் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 29 Date: 25.06.2025 |

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் தற்போது எண். 24 அப்பாராஜ் தெரு, மணலி, சென்னை 68 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சிசிடிவி கேமரா பொறுத்தும் வேலை செய்து வருகிறேன். கடந்த 09.07.2021 அன்று நானும், எனது அத்தை யுனிதா தேவியும் ஆக்டிவா என்ற இருசக்கர வாகனத்தில் மாத்தூர் விவேகானந்தா பள்ளியில் இருந்து மணலி நோக்கி வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது மாலை சுமார் 3.15 மணியளவில் எங்களுக்கு வலதுபுறமாக வந்து கொண்டிருந்த இருசக்கரவாகனம்

குறுக்கே வந்ததால், பிரேக் பிடித்த போது நிலை தடுமாறி நானும் எனது அத்தையும் கீழே விழுந்த போது பின்னால் இருந்து வந்த லாரி எனது அத்தை மீது மோதியது. அவரது இடது பக்க உடல் முழுவதுமாக நசிங்கி விட்டது. உடனே சிகிச்சைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சோர்த்த போது. மருத்துவர் பரிசோதித்து விட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள். ஆஜர் எதிரிதான் விபத்தினை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர் ஆவார். லாரியின் பதிவெண் தற்போது நினைவில்லை.

2. சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னுடையது தான் புகார் (**அ.சா.ஆ 1 ஆகா குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

3. நான் விபத்து நடந்த போது எனக்கு வாகனத்தை ஓட்டும் உரிமை கிடையாது. நான் எதிரியை பொதுமக்கள் தான் பிடித்து வந்து கொடுத்தார்கள் என்ற விபரத்தினை என்னுடைய புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, புகாரில் உள்ள கை எழுத்து மட்டும் தான் என்னுடையது. அதில் உள்ளவற்றை நான் எழுதவில்லை என்றால் சரிதான். புகாரில் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவ இடம் பள்ளி தேவாலையம் உள்ள பகுதி என்பதாலும், நால் ரோடு என்பதால் அங்கு வாகனம் வேகமாக செல்வதற்கான வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, அங்கு வாகனம் வேகமாக தான் வந்தது. இந்த விபத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் இல்லை, எனக்கும் காயம் ஏற்பட்டது.

4. அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா, என்றால் கொடுக்கவில்லை. ஆனால் எனக்கு காயம்பட்டது உண்மைதான். வாகனத்தை இயக்கியவர் சரியாகத்தான் ஓட்டிவந்தார் என்றாலும் விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல், பின்னால் வாகனம் இடித்ததற்கான எந்த ஒரு

சேதாரமும் என்னுடைய வாகனத்திற்கு கிடையாது என்றால், குறுக்கே வந்த வாகனத்தினால் நாங்கள் சரிந்து விழுந்து விட்டோம். விழுந்த எங்கள் மீது லாரி ஏறிவிட்டது. தற்பொழுது தான் இந்த சங்கதியை பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் நடந்ததைதான் சொல்கிறேன். சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையம் சென்று விட்டேன்.

5.காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது பொது மக்கள் யாரும் ஆஜர் எதிரியை பிடித்து உங்களிடத்தில் காட்டவில்லை என்றாலும், தற்பொழுது போலீசார் அடையாளம் காட்டித்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.06.25 15:01:43 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்